# தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் கழகம்

## 4 வது பொதுக்குழு தீர்மானங்கள்

இடம்: கோவை நாள்: 21.04.2013.

**தீர்மானங்கள்:**

1) மின் உற்பத்தியில் தன்னிறைவு அடையவும், மின்வழங்களில் சீர்மையும் பெற்று, அகில இந்திய அளவில் ஒப்பற்ற பொது நிறுவனமாக TANGEDCO உயர்வான நிலையை எட்டிட தற்போதைய மின் நிலையை கருத்தில் கொண்டு 3300 MW கூடுதல் உற்பத்தி செய்யவும், தற்போதைய மின்வாரிய நிதி நிலைமையை கருத்தில் கொண்டு, நிதி நிலைமையை சீராக்க தொடர்ந்து நிதியளித்து உதவிக்கொண்டிருக்கும் தமிழக அரசுக்கு மின் வாரிய பொறியாளர் கழகத்தின் பொதுக்குழு தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2) மின் உற்பத்தியை சீராக்கவும், மின் வழங்கலை தட்டுப்பாடு இல்லாமல் வழங்கவும், தமிழக அரசின் VISION 2023 ன் இலட்சியங்களை எட்டவும், மிகவும் தேவையான உதவிப்பொறியாளர்களின் தேர்வை, நேரடி தேர்வின் மூலம் ஒவ்வொரு வருடமும் சுமார் 600 பொறியாளர்களை பணியமர்த்த தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தையும் மின் வாரிய பொறியாளர் கழகத்தின் பொதுக்குழு அன்புடன் வேண்டுகிறது.

3) தற்போதைய மின்வாரியத்தின் உதவிப்பொறியாளர்கள் பணியிடங்களை நிரப்பிட நேரடித்தேர்வு மற்றும் உள்முகத்தேர்வு என இருவகையான நிலைப்பாட்டை தவிர்த்து, வாரிய நலன் கருதி, அனைத்து உதவிப்பொறியாளர் பணியிடங்களை நிரப்பிட ஒற்றைச் சாளர முறையை (single window selection) கடைபிடிக்குமாறு பொதுக்குழு அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

4) தமிழ்நாடு மின்வாரியத்தின் சீரமைப்பில், அதன் சார்பு நிறுவனங்களில், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் மேலாண்மைக்கான கொள்கைகளை (HR Policy) உரிய முறையில் திருத்தியமைத்து, விரைவில் வகுத்து வழங்கிட பொறியாளர் கழக பொதுக்குழு அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

5) உதவிப்பொறியாளர்களுக்கான அடிப்படை சம்பளத்தை Pay Band -3 ல் ரூ.15,600/= என உயர்த்தியும், தர ஊதியத்தை ரூ. 5,400/= என உயர்த்தியும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டு, அதன் பலனை 01.08.2010 முதல் அரசுத் துறைகளில் பணியாற்றும் உதவிப்பொறியாளர்கள் பெற்று வருகின்றனர்.அது போலவே, உதவி செயற்பொறியாளர்களுக்கு தர ஊதியம் ரூ.1,200/= உயர்த்தப்பட்டுள்ளது. செயற்பொறியாளர்களுக்கு தர ஊதியம் ரூ.1,000/= உயர்த்தப்பட்டுள்ளது.தலைமை பொறியாளர்களுக்கு தர ஊதியம் ரூ.600/= உயர்த்தப்பட்டுள்ளது. எக்காலத்திலும், அரசுத்துறை பொறியாளர்களைவிட கூடுதலாக ஊதியம் பெற்று வரும் மின் வாரிய

பொறியாளர்களுக்கு, இப்பலன் சுமார் மூன்றாண்டு காலமாக நீட்டிக்கப்படவில்லை. இப்பலன் மின் வாரிய பொறியாளர்களுக்கும் விரைவில் கிடைக்கும் வண்ணம் உரிய ஆணை வழங்கிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தக்க அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும் பொறியாளர் கழக பொதுக்குழு அன்புடன் வேண்டுகிறது.

மேலும் 01.12.2007 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் ஊதிய விகிதத்தில் காணப்படும் முரண்பாடு காரணமாக செயற் பொறியாளர்களுக்கு ஆண்டு உயர்வு மறுக்கப்பட்டு வருகிறது. நற்பணியாற்றி வரும் அத்தகைய பொறியாளர்கள் மத்தியில், இதன் காரணமாக விரக்தியும் வேதனையும் நிலவுகிறது.இந்த முரண்பாட்டை விரைவில் களைந்து, அவர்தம் துயர் துடைக்குமாறு பொறியாளர் கழக பொதுக்குழு அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

6) தற்போதைய மின்வாரிய சீரமைப்பில் (Restructuring) அறிவிக்கப்பட்டுள்ள பொறியாளர்களின் பணியிடங்களுக்கான கட்டமைப்பில் (Org.Structure) உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, சீரிய முறையில் திருத்தியமைத்து, ஏற்கனவே சீரமைக்கபட்டு செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கும் ஆந்திரம், மராத்தியம் போன்ற மாநிலங்களின் மின் வாரியம் போன்று திருத்தியமைத்து வழங்கிட பொறியாளர் கழக பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது. மேலும், அதைபோன்றே பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள், தற்போது பெற்று வரும் பணி நலன்களை காத்திட முத்தரப்பு ஒப்பந்தத்தை உடனே நிறைவேற்றிட பொறியாளர் கழக பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

7) தற்போது பொறியாளர் கழகத்திற்கு உறுப்பினர்களிடம் 2007ம் ஆண்டு முதல் பிடித்தம் செய்யப்படும் ரூ.250/= என்ற ஆண்டு சந்தா, 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் பொறியாளர் கழகத்திற்கு ஏற்படும் செலவினங்களை கருத்திற் கொண்டு, இந்த ஆண்டு முதல் ஆண்டு சந்தா தொகையாக மே மாத சம்பளத்தில் ரூ.600/= எனவும் வருடாந்திர நன்கொடை தொகையாக நவம்பர் மாத சம்பளத்தில் ரூ.600/= எனவும் உயர்த்தி பிடித்தம் செய்ய இப்பொதுக்குழு ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

8) தற்பொழுது பயன்பாட்டில் இருக்கும் பொறியாளர் சேம நல நிதி EBF-VI ரூ.7500/= என்ற தொகையும் அதன் விடுவிப்பு தொகை ரூ.3,00,000/= எனவும் உள்ளதை மாற்றி அமைத்து, பொறியாளர் சேம நல நிதி EBF-VII என்ற திட்டத்தை புதிதாக அனுமதித்து இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது. மேலும், இதன் சந்தா தொகையாக ரூ.15,000/= எனவும் விடுவிப்பு தொகையாக ரூ.5,00,000/= எனவும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது. மேலும் இத்திட்டத்தில் ஆயிரம் உறுப்பினர்கள் சேர்ந்தவுடன் அமலுக்கு வரும் என்பதனையும் அதுவரை EBF-VI திட்டத்தின் பலன் தொடரும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறது.

9) பொறியாளர் கழகத்தின் சார்பாக வருடந்தோறும் வெளியிடப்படவுள்ள "Engineers Diary", விழா மலர் (souvineor) போன்றவற்றை பதிப்பு செய்யும் தொகையை, சுய சார்புடன் ஏற்பாடு செய்து பதிப்பு செய்ய இப்பொதுக்குழு அங்கீகரிக்கிறது.

*************